பக்கங்கள்: பத்து
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 22 செவ்வாய்க்கிழமை [06-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 190

# மிதிவெடிகள் கண்டுபிடிக்கும் நிபுணர் குழு வியாழன் வரும்

## 4 மோப்ப நாய்களும் கூடவே வருகின்றன

கொழும்பு, ஜூலை 6

யாழ். குடாநாட்டில் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் இடங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுவதற்காக முதலாவது தொகுதி நிபுணர் குழு நாளை மறுதினம் வடக்கே வருகின்றது.

நிலத்தின் கீழ் புதைந்திருக்கக் கூடிய வெடிப்பொருள்களை மோப்பம் கண்டு அறியும் திறனுடைய நான்கு மோப்ப நாய்களையும் இந்த நிபுணர் குழு கூட்டி வருகின்றது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

மிதிவெடி அகற்றும் பணிக்காக ஸிம்பாப்வேயில் இருந்து வந்துள்ள நிபுணர்கள் குழு கொழும்பில் ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியது.

கண்ணிகளை மோப்பம் பார்த்து அடையாளம் காட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட 4 மோப்ப நாய்களும் செய்தியாளர் மாநாட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

அந்த நாய்கள் எப்படிக் கண்ணிகளை இனங் காட்டும் பணியில் ஈடுபடும் என்பது குறித்து செய்முறையும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாதோட்டத்தில் நேற்று கண்ணிவெடித் தாக்குதல்!

மன்னார் மாவட்டத்தில் ஆண்டான்குளத்தில் இருந்து உயிலங்குளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலீஸ் டிரக் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு மாதோட்டம் என்னும் இடத்தில் கண்ணி வெடியில் சிக்கியது.

இந்தத் தாக்குதலில் மாதோட்டம் அதிரடிப் படை முகாமைச் சேர்ந்த நிமால் ரட்ண பெரேரா என்ற அதிரடிப் படைச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

அந்த டிரக்கில் இருந்த உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டரும் மற்றும் 4 பொலீஸாரும் காயம் அடைந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாயில் நேற்று குண்டு வெடிப்புச் சம்பவம்

மானிப்பாய், ஜூலை 6

மானிப்பாய் பிரதேச சபை அலுவலகத்துக்குச் சமீபமாக நேற்றுக் காலை 9 மணியளவில் குண்டு ஒன்று வெடித்துள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கி பொன்னையா சபாநந்தம் ( 74 வயது ) என்பவரும் மற்றொருவரும் காயமடைந்தனர்.

வீதி ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததாகக் கூறப்பட்டபோதும், அங்கு கிரனேட் வீச்சே இடம்பெற்றதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் நேற்று மாணவர்கள் பகிஷ்கரிப்பு

வேலணை, ஜூலை 6

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் நேற்று வகுப்புக்களை பகிஷ்கரிக்கும் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சிரேஷ்ட வகுப்பு மாணவி ஒருவரை அங்கு பணியில் இருந்த சீருடையினர் வழிமறித்து அநாகரிகமாக நடந்ததாகவும் —

அந்தச் செயலைக் கண்டித்தே நேற்று மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பை ஆரம்பித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உவர்மலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலை, ஜூலை 6

திருகோணமலையில் உவர்மலை மத்திய வீதியில் மாகாண சபையின் உயர் அதிகாரிகள் தங்கியிருக்கும் குடியிருப்புப் பகுதி மீது நேற்றிரவு 9 மணியளவில் கிரனேட் வீசப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்தக் குடியிருப்பின் பிரதான வாசல் கதவு சேதமடைந்தது.

இதையடுத்துப் படையினர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்; எவரும் கைதாகவில்லை.

(உ-3)

## தலைமன்னார் கடலில் இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 6

தலைமன்னார் கடலில் சந்தேகத்துக்குரிய வகையில் படகில் திரிந்த இருவரைத் தாங்கள் வள்ளத்துடன் கைது செய்ததாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

(உ-3)

## இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 6

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் கடந்த சனியன்று இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெய்வேந்திரன் பிரபாகர் (வயது 26) என்ற இளைஞரே கைது செய்யப்பட்டவராவார்.

இவரது கைது தொடர்பாக உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-5-6-173)

## நேபாளத்தில் ஜனாதிபதி

காத்மண்டு, ஜூலை 6

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று நேபாளம் சென்றடைந்த இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பலத்த பாது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பெயர்ப்பலகையை அகற்றுமாறு உத்தரவு

திருநெல்வேலி பலாலி வீதியில் உள்ள கடைகளின் பெயர்ப் பலகைகளை நீக்கும்படி படையினர் பணித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக சந்தியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்தே இந்த அறிவுறுத்தல் இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளது (இ-86)

## மரங்கள் தறிப்பு

வலி. வடக்கு ஜூலை 6

அரியாலை கண்டி வீதிக் கரையில் உள்ள மரங்கள் பலவும் இராணுவத்தினரின் பணிப்புரையைத் தொடர்ந்து தறிக்கப்பட்டு வருகின்றன.

வீதிக் கரைகளில், வீடுகளின் உள்புறம் நிற்கும் பயன்தரு மரங்கள் உட்பட வேம்பு போன்ற பாரிய மரங்களும் தறிக்கப்பட்டு வருகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் பொறுப்பாளர் வவுனியாவில் நேற்றுக் கைது

வவுனியா, ஜூலை 6

வவுனியா பூந்தோட்டம் பிரதேசத்தின் புளொட் அமைப்புப் பொறுப்பாளர் ரமணன் நேற்றுக் காலை பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது வீட்டில் ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அவர் கைது செய்யப்பட்டதாகவும்—

பல ஆயுதங்கள் அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதாகவும்—

பொலீஸார் தெரிவித்தனர்.

இவரைக் கைது செய்யும் முன்னேற்பாடாக அவரது

(10ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் மீதான தாக்குதல்:

## மனித உரிமைகள் அதிகாரி நேரில் சென்று விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 6

தாவடி, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து அந்தப் பகுதிகளில் பொதுமக்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் நேற்று நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

தாவடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை பஸ் தீயிடப்பட்ட சம்பவத்தை அடுத்தும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தினம் வன்னியில் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜூலை 5

விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தினம் நேற்று உணர்வு பூர்வமாக—எழுச்சியாக — தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

வன்னியில் நேற்றுக்காலை மல்லாவியில் உள்ள மாவீரர் மண்டபத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கரும்புலி தினத்தை ஒட்டி

## கொழும்பில் நேற்று தீவிர சோதனை!

கொழும்பு, ஜூலை 5

கரும்புலி தினமான நேற்று கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் சோதனைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

திடீர் வீதிச் சோதனைகள் நகரில் இடம்பெற்றதால் போக்குவரத்துத்தடைப்பட்டு பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பிரதேசங்கள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் இடம்பெற்றன.

மொறட்டுவ, களுத்துறைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குழி தோண்டியதால் 200 தொலைபேசிகள் 'அவுட்'!

யாழ்ப்பாணம், ஜூலை 6

கொட்டடி சிவன்பண்ணை வீதியில் நேற்று நண்பகல் இனந்தெரியாதோர் நிலத்தில் வெட்டிய குழிகாரணமாக யாழ்ப்பாணத்தில் ஒருபகுதிக்கான தொலைபேசிச் சேவை தடைப்பட்டது.

மானிப்பாய், கொக்குவில் மற்றும் கே. கே. எஸ். வீதி ஆகிய பகுதிகளுக்கான சுமார் 200 தொலைபேசி இணைப்புக்கள் — நேற்றுப் பிற்பகல் செயலிழந்தன.

அதையடுத்து அந்தப் பகுதிகளுக்கு இணைப்பு வழங்கும் நிலத்துக்குக் கீழான கேபிள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நன்றி நவில்கின்றோம்



## 'கலாபூஷணம்'
## எஸ். ஆர். ஞானசுந்தரம்

'கலாபூஷணம் -99' விருதுபெற்ற எஸ்.ஆர். ஞான சுந்தரம் அவர்களுக்கு 27 – 6 – 99 அன்று பாராட்டு விழா நடத்தி, பொன்னாடை போர்த்திக்கௌரவித்த யாழ். இலக்கிய வட்டம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் பொன்னாடை, மலர்மாலை அணிவித்துக் கௌரவித்த வடகோவை சித்திரவேலா யுதர் தேவஸ்தானம், மாதகல் நுணசை முருகன் தேவஸ்தானம், ஏழாலை மடாலய விநாயகர் தேவஸ் தானம், மாவிட்டபுரம் வீணியவரை அம்மன் தேவஸ் தானம், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் மற்றும் அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம்.

'கலாபூஷணம்' எஸ்.ஆர்.ஞானசுந்தரம் குடும்பத்தினர்
(சி/8097)

# நன்றி நவிலல்

எம் அன்புக்கினிய குடும்பத் தலைவி

## திருமதி திரவியம் செல்வநாயகம்

யாழ். போதனா வைத்தியசாலையில் 19–05–99 முதல் 04 – 07 - 99 வரை நோய்வாய்ப்பட்டு இருந்த காலத்தில் அவர்களை அன்போடும் பண்போடும் ஆதரித்து மருத்துவ சேவையளித்த வைத்திய கலாநிதி மகேசன் ஐயா அவர்களுக்கும் வைத்திய கலாநிதி ரவிராஜ் ஐயா அவர்களுக்கும் வைத்திய கலாநிதி காந்தநேசன் ஐயா அவர்களுக்கும் ஏனைய வைத்திய கலாநிதிகள் (House Officers) அவர்களுக்கும் பரிவுடன் பணிவிடை புரிந்த தாதிமார்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் எமது அன்பு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

த. செல்வநாயகம்
குடும்பத்தினர்

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.
(67217)

# VACANCY

## English Typist (Female)

A Jaffna based construction firm requires the service of an English Typist with experience of Five Years. Preference will be given to those who Possess Knowledge in Book Keeping.

Salary Negotiable.
Apply Before 12-07-99.

Advertiser No. 907,
C/o. Uthayan,
Jaffna.

(67213)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 6

யாழ். மாவட்ட கூடைப்பந் தாட்டச் சங்கம் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந் தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆண்கள் பிரிவு ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:–

★ பிற்பகல் 4–00 மணி — பற்றீ ஸியன் வி.க. கோல்ட்ஸ் அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

★ பிற்பகல் 5–00 மணி — சென்ரலைட்ஸ் வி. க. அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி.க. அணி.

[உ–3]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பகுதி 'ட' நடத்தும் கருத்தரங்குத் தொடரில் இரண்டாவது கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் க. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

''இந்தியத் தேர்தல் தொகுதிகளும் தேர்தல் முன்னோட்டமும்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்துரை வழங்குவார்.

(உ–9)

## நாகம்ஸ்
சுன்னாகம்

கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த

## ஜீன்ஸ்

(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
[67132]

## ராஜா
யாழ்ப்பாணம்

37 ஆவது நாளாக
விஜய், தேவயானி,
ரம்பா, மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த

## நினைத்தேன் வந்தாய்

10.30, 2.30
[சி/8038]

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் நவரட்ணம்

உடுவில் மடத்தடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய உரிமையாளரான ஆறுமுகம் நவரட்ணம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் மாரிமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் இராசமணியின் அன்புக் கணவரும், சரஸ்வதி, ஜெகராஜசிங்கம், காலஞ்சென்ற பரிமளம், தவராசா, செந்தில்நாயகம், பூமணி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விக்னேஸ்வரமூர்த்தி (சுவிஸ்), காலஞ்சென்ற விக்னேஸ்வரி, வவி, நாகேஸ்வரி (சந்திரி—சுவிஸ்), மகேந்திரன் (குஞ்சு—ஜேர்மனி), மகேஸ்வரன் (வவி—ஜேர்மனி), மனோகரன் (சுவிஸ்), மனோகரி (சாந்தி—சுவிஸ்), வசந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வனஜா, தேவி, சுரேந்திரன், வைலற், அம்பிகா, வர்ணலாதேவி, சுப்பிரமணியம் ஆகியோரின் மாமனாரும், பேளி, பேசி, சேளி (சுவிஸ்), சுஜின், நிஷான், பவின் (சுவிஸ்), கத்தியா, சாயி (ஜேர்மனி), யுவான், செளினா (ஜேர்மனி), மீரா, மது, கரிதேவ் (சுவிஸ்), சர்மிலன், நிர்மிலன் (சுவிஸ்), ஜெனி, கிஷான், கஜின், றொஜின் (யா/மத்திய கல்லூரி), ஜெலா (கன்னியர்மடம்), றொஷினா (யா/திருக்குடும்ப கன்னியர்மடம்), டினேஸ் (யா/பத்திரிசியார் கல்லூரி), றொனிஷ் (யா/பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பேரனும் மக்ஸ் யூட்டின் (சுவிஸ்) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6- 7- 99) செவ்வாய்க்கிழமை (பழைய நேரம்) பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ந. வவி (மகன்)

83/9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(67222)

## திருமதி கந்தசாமி இந்திராணி

நல்லூர் மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமிஇந்திராணி காலமானார்.

அன்னார் தம்பு கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசையா–கண்மணி தம்பதிகளின் அன்பு மகளும், வத்சலா (சுவிஸ்), ரீபன் (சுவிஸ்). பிறேமலா, திலீபன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேசலிங்கத்தின் (சுவிஸ்) மாமியாரும், யோகம்மாவின் (றம்பா) சகோதரியும் மதுஷாவின் (சுவிஸ்) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6– 7– 99) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தம்பு-கந்தசாமி

காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(67215)

## கதிரித்தம்பி பொன்னுத்துரை

மீசாலை மேற்கைச் சேர்ந்த கதிரித்தம்பி பொன்னுத்துரை அவர்கள் 4–7–99 ஞாயிற்றுக்கிழமையன்று நோர்வேயில் காலமானார்.

அன்னார் அன்னலக்ஷ்மியின் அன்புக் கணவரும் சிவயோகம் (நோர்வே), சிவலோகம் (சுவிஸ்), சிவகிரிஷா ஸ்ரீகாந்தன் (ஜேர்மனி), உதயகுமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யோகமூர்த்தி (நோர்வே), செல்வேந்திரன் (சுவிஸ்), நந்தகுமார் (ஆசிரியர், அல்லாரை அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷ்யா, நிலோஷா, ஜெனிசா, ஜெசானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ச. நந்தகுமார்
(மருமகன்)

மீசாலை மேற்கு,
மீசாலை.
(67202)

## குமாரவேலு தங்கவேலு

காரைநகர் பலுகாட்டைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு தங்கவேலு 5–7–99 திங்கட்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு இராசம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற காசிநாதர் ஆச்சிமுத்து அவர்களின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் கதிர்காமநாதன், நாகேஸ்வரி, சிவநாதன், சிவகரன், ரதிமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06–07–99) செவ்வாய்க்கிழமை 2–00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வியாவில் ஐயனார் தீர்த்தக்கரை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கருங்காலி,
காரைநகர்.
[67220]

# யா/இணுவில் மத்திய கல்லூரி
# கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் - 1999

காலம்: 1999 – 07 – 07 புதன்கிழமை பிற்பகல் 2 மணி

இடம்: சரஸ்வதி கலை அரங்கம் (கல்லூரி மைதானம்)

தலைவர்: திரு. துரை. எங்கரசு (அதிபர்)

பிரதம விருந்தினர்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

சிறப்பு விருந்தினர்கள்: கலாநிதி சபா. ஜெயராசா
தலைவர், இராமநாதன் நுண்கலைப்பீடம்.
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்.
திருமதி கோகிலா மகேந்திரராசா
உதவிக் கல்விப் பணிப்பாளர், பாட அபிவிருத்தி
வலிகாமம் — கல்வி வலயம்

கௌரவ விருந்தினர்: திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை
முன்னாள் அதிபர்.

பரிசில் வழங்குதல்: திருமதி இராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை

நன்றியுரை: திரு. செ. இலகுநாதன் செயலாளர், பா. அ. சங்கம்.

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

❖ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ❖

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,

[சி/8095]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடுருவல்காரரை திருப்பி அழைக்க பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கும்

## கிளின்ரனிடம் ஷெரீப் தெரிவிப்பு

வாஷிங்ரன், ஜூலை 6
இந்திய எல்லைக்குள் ஊடுருவிய தமது துருப்புக்களை வாபஸ் பெற பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கும் என்று பாக் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றிருந்த நவாஸ் ஷெரீப் அங்கு கிளின்ரனுடன் நேற்று முன்தினம் 4 மணி நேரம் பேச்சுக்கள் நடத்தினார்.

இந்தப்பேச்சுக்களை அடுத்து இரு தலைவர்களும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் படை வாபஸ் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:

★ இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ள படைகளை விலக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

★ சிம்லா ஒப்பந்தத்தின் பிரகாரம் எல்லைக்கோட்டைப் பராமரிக்க வேண்டும்.

★ பாகிஸ்தான் படைகளை வாபஸ் பெற்ற பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் ஆர்வம் காட்டுவார்.

★ இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் படைகளை வாபஸ் பெற்ற பின்னர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பகை அகல ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் படைகள் வாபஸ் பெறப்பட்டு இரு நாடுகளுக்கும் இடையிலான சண்டை முடிவுக்கு வரும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டனர்.

(இ-3)

## இராணுவத் தொடர்புகள் துண்டிப்பு

பெல்கிரேட்டில் உள்ள சீனத் தூதரகம் மே 7 ஆம் திகதி தாக்கப்பட்ட பின்னர் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராணுவத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1994—95 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் அடிமட்டத்தை அடைந்துள்ளன.

## போதைப் பொருள் ஒழிப்பு தினத்தில் 78 பேருக்கு மரண தண்டனை!

பெய்ஜிங், ஜூலை 6
சீனாவில் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக 78 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

போதைப் பொருள் ஒழிப்புத் தினமான கடந்த 24 ஆம் திகதி இந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து சீன அரசாங்கம் எடுத்த தீவிர நடவடிக்கை காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் விசாரிக்கப்பட்டு இவர்களில் 78 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த மரணதண்டனை சீனாவில் பல்வேறு நகரங்களில்வைத்து ஒரே நாளில் நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தானைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் நாடல்லாத சீனாவில் முஸ்லிம் ஒருவருக்கு முதல் தடவையாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

(இ 3)

## கிளின்ரனின் அழைப்பை ஏற்க வாஜ்பாய் மறுப்பு

புதுடில்லி, ஜூலை 6
அமெரிக்கா வருமாறு இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயுக்கு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் தொலைபேசியில் வாஜ்பாயுடன் கிளின்ரன் பேச்சு நடத்திய சமயம் இந்த அழைப்பை விடுத்ததாகவும் —

தற்போதுள்ள நிலையில் தம்மால் வரமுடியாதுள்ளது என்று வாஜ்பாய் பதில் அளித்ததாகவும் — இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-3)

## மீண்டும் ஏவுகணைச் சோதனை நடத்த வடகொரியா முயற்சி!

### அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா அதிருப்தி

ஜூலை 6
ஒரு வருட காலத்துக்குள் வடகொரியா—இரண்டாவது தடவையாக—மீண்டும் ஏவுகணை ஒன்றைப் பரிசோதிக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

வடகொரியாவின் இந்த நடவடிக்கை ஜப்பான் மற்றும் அமெரிக்கா, தென்கொரியா போன்ற நாடுகளை ஆத்திரம் கொள்ள வைத்துள்ளது.

### உலக அரங்கில்

வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனையால் தென்கொரியாவும் பல ஏவுகணைத் திட்டங்களை செயற்படுத்தமுனையலாம் எனவும்-

இதனால் கொரிய தீபகற்பத்தில் ஆயுதப் போட்டிகள் ஏற்படலாம் எனவும் —

ஆய்வாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

வடகொரியாவின் ஏவுகணைத் திட்டத்தை தடுக்க இராஜீய வழியில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்துகின்றது.

இதேவேளை —

ஏவுகணைப் பரிசோதனைத்திட்டம் தொடர்பாகத் தென்கொரியா தொடர்ந்து அமைதியைப் பேண வேண்டும் என அதிபர் கிளின்ரன் தென்கொரிய ஜனாதிபதி கிம் டஸ் ஜங்கைக் கேட்டுள்ளார்.

அமெரிக்காவும் தென்கொரியாவும் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி 20 வருடங்களுக்கு தென்கொரியா சக்தி வாய்ந்த ஏவுகணைகளை பரீட்சித்துப் பார்க்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-க)

## இறுதித் தாக்குதலுக்கு இந்தியா தயாராகிறது

புதுடில்லி, ஜூலை 6
இந்திய எல்லைக்குள் ஊடுருவியுள்ளவர்களை விரட்டி அடிக்கும் இராணுவ நடவடிக்கையின் இறுதித் தாக்குதலுக்கு இந்தியப் படைகள் தயாராவதாக இந்திய படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

புலிக்குன்றை படையினர் கைப்பற்றிய வெற்றித் தாக்குதலைஅடுத்துஊடுருவல்காரர்களை விரட்டும் இறுதித் தாக்குதலை ஆரம்பிக்கப் படையினர் தயாராவதாகவும்—

இன்னும் எஞ்சியுள்ளதாகக் கருதப்படும் 300 ஊடுருவல்காரரை விரட்டவே இந்த இறுதித்தாக்குதல் இடம்பெறவிருக்கின்றது என்றும் — படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-3)

## பாரதீய ஜன்தா கட்சியை ஆதரித்தது பெரும் தவறு

### ஜெயலலிதா கூறுகிறார்

சென்னை, ஜூலை 6
''கடந்த மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்ததன் மூலம் மாபெரும் தவறு புரிந்துவிட்டேன்''

இப்படி அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த முஸ்லிம் மகளிர் மாநாட்டில் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் பேசுகையில் கூறியதாவது:-

எதிர்காலத்தில் எக்காரணம் கொண்டும் பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேரமாட்டேன் அதனுடன் இணைந்து கூட்டணி அமைத்தமைக்கான பிராயச்சித்தமாக அந்த அரசாங்கத்தைக் கவிழ்த்தேன்.

பாரதீய ஜன்தாவுடன் கூட்டணி அமைத்துள்ள தி.மு.கவுக்கு எதிராக கூட்டணி ஒன்றை உருவாக்கப் போகிறேன்.

மதச் சார்பற்ற அமைப்புக்களுடன் இது தொடர்பாகப் பேசி வருகின்றேன் — என்றார் ஜெயலலிதா. (இ-3)

## பலஸ்தீன அமைச்சர்கள் கோரிக்கை

ஹெப்ரோன், ஜூலை 6
வைநதி ஒப்பந்தத்தின் பிரகாரம் பலஸ்தீனத்தில் இருந்து இஸ்ரேலியப் படைகளை விலக்கிக் கொள்ளுமாறும் யூதக் குடியிருப்புக்களை கட்டுவதைநிறுத்தும் படியும் பலஸ்தீன அமைச்சர்கள் இஸ்ரேலைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த இரு பிரச்சினைகளும் சமாதானத்துக்குத் தடையாக இருப்பது தோற்றதே.


## தேவை

### எழுதுவினைஞர் [CLERK]

(ஆண்கள் மட்டும்)

யாழ். நகரில் உள்ள வர்த்தக ஸ்தாபனத்துக்கு ஆங்கில அறிவுடைய A/L பரீட்சையில் வர்த்தக பாடத்தில் திறமைச் சித்தியுடன் முன் அனுபவமுள்ள 40 வயதுக்குட்பட்டவர்கள் தேவை. நேரில் வரவும்.

**நியுரோன் எலெக்றிக்கல்ஸ்**
141 – 143 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(67205)



## யாழ். மனித முன்னேற்ற நிலைய மனையியல் பொருள்கள் கண்காட்சி

மனித முன்னேற்ற நிலைய மனைப் பொருள்கள் மகளிர் பயிற்சி நிறைவுச் சான்றிதழ் வழங்கும் வைபவமும், கண்காட்சியும் இன்று செவ்வாய்க்கிழமை 06 – 07 – 99 காலை 9.30 மணிக்கு யாழ். ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

ஆயர் அவர்கள் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குவார். கலை ஆர்வம் கொண்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: மறைக்கல்வி நடுநிலையம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 06 – 07 / 07 / 99 [இருநாள்கள்]
காலை 9.30 – மாலை 5.00 மணிவரை.

[67206] – இயக்குநர்



## விற்பனைக்கு

ஊர்காவற்றுறை பிரதேசசபை கூறுவிலையால் கொள்முதல் செய்யப்பட்ட 2'' அல்கத்தீன் பைப் 1000 கேச் இங்கிலண்ட் பைப் (250 அடிக்கு உட்பட்ட) விற்பனைக்குண்டு.

கிடைக்குமிடம்:

**K. B. பாலன் குரூப்**
பாலன் இரும்பு விற்பனை நிலையம்,
261, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி,
(மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம். (67209)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

(06 – 07 – 1999)

06 – 06 – 1999 இல் அமரத்துவம் எய்திய
**அமரர் ஆறுமுகம் ஐயாத்துரை**

அவர்களது ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

சனசமூக நிலையத்தினர்,
இழவி தோட்டம்.

கரவெட்டி கிழக்கு.

[67165]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சிவபாதம் தனலக்சுமி ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை, விஷேட அடையாள அட்டை இரண்டும் இருபாலைச் சந்திக்கும், அச்சுவேலிக்கும் இடையில் பஸ்ஸில் செல்லும் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இருபாலைச் சந்தியிலுள்ள டெனி கூல்பாரில் ஒப்படைக்கவும். [67194]

அம்பனை தெல்லிப்பழையைச் சேர்ந்த வல்லிபுரம் தவமணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை [ இல. 375340550 V ] 27—06—99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கரன் அழகு சாதன மாடம், சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். [67184]

சிவசுந்தரம் பிரேம்குமார் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை [653071990V] 17—06—99 அன்று யாழ். பஸ் நிலையத்திற்கும் கச்சேரி நல்லூர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 55, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும்முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [67197]

## விற்பனைக்கு

ஒரு கன்னி மறி ஆடும், ஒரு ஆறு மாதம் நிரம்பிய ஜமுனாபாரி மறிக்குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [67199]

யாழ்ப்பாணம் கோவில் வீதி இல. 18, [அருள் ஆச்சிரமத்திற்கு முன்பாக] சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கிறிஸ்ரி இராசநாயகம், இல. 18, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [67185]

## தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு; தனபாலசிங்கம் [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு[ இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [67200]

## யாழ்ப்பாணம்

ஒரு ஆசிரியர் ஓய்வு பெறுகிறார் நாடகத்தை வானொலியில் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல் 2. யாழ்ப்பாணம் சிறுகதை தொகுப்பு ரூபா 50. [67023]

## T.Vகள் விற்பனைக்கு

2030, 2060, 2032 மற்றும் 27'' Sony, National ரீ.விகள் விற்பனைக்குண்டு. (மிகவும் மலிவானவிலையில்) எஸ்.சதாகரன், மூளாய் றோட், மத்தியூஸ் லேன், சுண்டுக்குளி. (66978)

## ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். புதன் கிழமை 111/3 கோயில் வீதி. நல்லூர். ஞாயிறு முழுநாளும், ஏனைய நாள்களில் 4 மணிக்குப் பின் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். பொய்யாமொழி ஜோதிடம். [67169]

---

## மல்லாகம் சனசமூக நிலைய

கட்டட நிதிக்கான

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

1 ஆம் பரிசு — 1381
2 ஆம் ,, — 0082
3 ஆம் ,, — 1748

10 ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1944 | 1035 | 1897 | 0871 |
| 1994 | 0771 | 0292 | 0332 |
| | 1390 | 2889 | |

11 - 7 - 99 ஆம் திகதி பரிசில்கள் வழங்கப்படும்

நிர்வாகம்

(67207)

---

## சேவை நலன் பாராட்டு விழா நன்றி நவிலல்

யா/புனித மரியாள் வித்தியாலயத்தினரால் வித்தியாலய மண்டபத்தில் 01 – 07 – 99 அன்று காலை 9-30 மணியளவில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவின் போது

பான்ட் வாத்தியத்துடன் அழைத்து திருப்பலி பூசையை ஒப்புக்கொடுத்து பூமாலை, பாமாலை, பாராட்டு உரைகள், வாழ்த்துச் செய்திகள், அன்பளிப்புக்கள் வழங்கி கௌரவித்த அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், பங்குத்தந்தை, அருட்தந்தை, அருட்சகோதரிகள், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள், உற்றார்கள். உறவினர்கள், நண்பர்கள். தொழில் அதிபர் ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இளைப்பாறிய அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள், பாடசாலை நலன்விரும்பிகள், படப்பிடிப்பாளர், பாடசாலை மழலைச் செல்வங்கள் அனைவருக்கும் எனது இதயம் கலந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி நாகேஸ்வரி
ஹென்றி வில்லியம்ஸ்

55, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (67196)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 14 — 06 — 1916



அரனின் அடியில் 17 — 06 — 1998

### அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி

( யாழ்ப்பாண வர்த்தகர் )
7 ஆம் வட்டாரம், புங்குடுதீவு

திதி: 06 - 07 - 1999 செவ்வாய்க்கிழமை

ஆண்டு ஒன்று சென்றதப்பா
ஆறவில்லை எம் கவலை
திக்குத்திசை எங்கணுமே
தேடுகின்றோம் காணவில்லை
போனதிசை தெரிந்திருந்தால்
போன் பண்ணி கதைத்திருப்போம்
பொல்லாத காலனவன்
பறித்துவிட்டான் உன் உயிரை
பானாவிடையின் பாதத்தில்
பூங்கொத்தாய் நீ விழுந்து
பாரினிலே எம்மவர்க்கு
பரிசனைத்தும் வேண்டிடுவீர்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
(கனடா, கொழும்பு, யாழ்ப்பாணம்)

தகவல்
எஸ். கே. சண்முகலிங்கம்,
அதிபர், யா / புங்குடுதீவு
ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயம்,
132/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். ([illegible])

---

கொக்குவில் – தாவடி

## வேம்படி முருகமூர்த்தி கோயில் குருக்கள் தேவை

நித்திய, நைமித்திய பூசைகள் நன்கு செய்யக் கூடிய குருக்கள் தேவை. தயவுசெய்து முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

– தர்மகர்த்தா சபை

கொக்குவில் – தாவடி. (67198)

---

## கண்ணீர் [பூக்கள்] அஞ்சலி

### செல்வன் ராஜா பாலகுமரன்

ஆயத்தடி அல்வாயைச் சேர்ந்தவரும்
வதிரி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரம செயலாளருமான
திரு. ராஜா அவர்களின்
கனிஷ்ட புத்திரராகிய
செல்வன் ராஜா பாலகுமரன்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆச்சிரமவாசிகள் அனைவரும் தங்கள் கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பிப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ந. இரத்தினகோபால்
(முகாமையாளர்)
ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்

(சி/8097)

---


## கைதடி புதிய வடிசாலையின் உற்பத்தி




## உங்களை மகிழ்விக்க மீண்டும் உசார்

புதிய முறை வடிவமைப்புடன்
நவீன பொறித் தொகுதியில் பெற்ற
தரச் சிறப்பு மிக்க பனஞ்சாராயம்
உங்கள் உபயோகத்துக்காக
வெளிவந்துவிட்டது.

உள்ளூர் உற்பத்திக்கு நல்லாதரவை நல்கி
தேசிய வளம் பெருக்க உதவிடுவீர்

தொடர்பு:
பொதுமுகாமையாளர்
தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி,
டச்சு வீதி,
2 ஆம் கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

வடிசாலை அமைவிடம்
கைதடி
அரச வடிசாலையின் முன்னைய கட்டடத் தொகுதி.

(சி/ 8093)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர், நாவாந்துறைப் பகுதியில் 100 குடும்பங்களுக்கு வீட்டு வசதி

வலி. கிழக்கு, ஜூலை 6

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் குருநகர், நாவாந்துறைப் பகுதிகளில் அரசாங்ககாணிகளில் வசித்து வரும் 100 குடும்பங்களுக்கு புதிதாக வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த குடும்பங்களுக்கு வீடு கட்டவென தலா 35 ஆயிரம் ரூபாவை மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வழங்கும் எனவும் மிகுதிப் பணம் கடன் அடிப்படையில் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் வீடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபா வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான பூர்வாங்க வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

(இ180)

## மின் ஊழியர் உள்வாங்கல்

வலி. கிழக்கு, ஜூலை 6

நல்லூர் பிரதேசசபையில் இதுவரை கடமையாற்றிய மின் ஊழியர்கள் அனைவரையும் இலங்கை மின்சாரசபை உள்வாங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-180)

# ஐஸ்பழ வானில் கைதான மூவருக்கு பிணை அனுமதி

நெல்லியடி, ஜூலை 6

ஐஸ்பழ வானில் பயணம் செய்தவேளை படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளம் பெண்ணை 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல பருத்தித்துறை மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஐஸ்பழ வானில் மாலை நேரம் பயணம் செய்த உடுப்பிட்டியைச் சேர்ந்த தேவராஜா சுபாஜினி (வயது 16) என்பவரையும், இந்த வானில் வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணேஷ் இராஜேந்திரன் (வயது 29), கந்தன் உதயரஞ்சன் (வயது32) ஆகியோரையும் வல்லைப் பகுதியில் வைத்து படையினர் கைது செய்து நெல்லியடி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர்.

இவர்கள் மூவரையும் நெல்லியடி பொலீஸார் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம் இம்மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டிருந்தார்,

இந்த வழக்கு விசாரணை கடந்த 26 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம் எதிரிகளான ஐஸ்பழ வான் சாரதியையும் விற்பனையாளர் இருவரையும் 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 25 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிவான் இளம் யுவதியையும் எச்சரிக்கை செய்து பத்தாயிரம் ரூபாஆள்பிணையில் விடுவித்தார்.

(இ-109)

# கட்டுமரம் வழங்கும் வைபவம்

நெல்லியடி, ஜூலை 6

சேந்தாங்குளம் வலித்தூண்டல் இடம் பெயர்ந்தோர் கடற்றொழிலாளர் சங்கம் உட்பட மேலும் சில கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் கட்டுமரங்கள் வழங்கும் வைபவம் இன்று 6 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வடமராட்சியிலுள்ள சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் நடைபெறும்.

இந்த விழாவில், யாழ். மறைமாவட்டஆயர் பேரருள் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மனிதமுன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்திரு, சீ. ஜீ. ஜெயக்குமார், பருத்தித்துறை பங்குத்தந்தை பி. எம். இம்மனுவேல் ஆகியோர் கலந்து கொள்ளுவார்கள்.

மனித முன்னேற்ற நடுநிலைய ஆதரவுடன் இந்த வைபவம் இடம் பெறுகிறது.

(இ-109)

# மாறி வரும் உலகுக்கு ஏற்ப கல்வி வழங்கப்பட வேண்டும்

## வெள்ளி விழாவில் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 6

தற்போது மூன்றாம் உலக நாடுகளில் வளர்ச்சி துரிதமாக இருக்கின்றது. அதே நேரம் மக்களின் அபிலாஷைகள் பெருகிக் கொண்டே வருகின்றன. அந்த வகையில் எமது மக்களது அபிலாஷைகளையும், எதிர்பார்ப்புக்களையும், வளர்ச்சியையும் ஈடுகட்டும் வகையில் அடுத்து வரும் 25 ஆண்டுகளில் யாழ் பல்கலைக்கழகம் தயாராக உள்ளதா? துரிதமாக மாறி வரும் உலகில் மக்களுக்குத் தேவையான உயர் கல்வியை வழங்குவதற்கு நாம் ஆயத்தமா? என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் நல்லாயன் மன்றத்தில் நடத்திய வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமானது இதுவரை சுமார் 10 ஆயிரம் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. 1974 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகம் யாழ். வளாகம் என்ற பெயரில் இந்த பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது சிறந்த வளர்ச்சி அடைந்து வவுனியா வளாகத்தைப் பெற்றெடுத்துள்ளது. இது ஓர் சாதனை அல்லவா?

இன்று யாழ். பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு என்றவகையில் மட்டுமல்ல மேலும் பல துறைகளிலும் கல்வியைப் புகட்டி வருகின்றது. இரு பீடங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் இன்று எட்டுப் பீடங்களுடன் நிமிர்ந்து நிற்கின்றது.

பல்வேறு கஷ்டங்களையும் தடைகளையும் கடந்தே நாம் கடந்த 25 ஆண்டுகளைத் தாண்டி இன்று வெள்ளி விழாக் கண்டுள்ளோம். அடுத்து வரும் சுமார் 25 வருடங்களும் எமக்கு கஷ்டமானதாகத் தான் இருக்கும். ஏனெனில் இன்று உலகம் முழுவதற்கும் உலகளாவிய பொருளாதாரத்துச்கும் என்று அனைத்துக்கும் கல்வியே முக்கிய அடிப்படையாகத் திகழ்கின்றது.

இதற்கு நல்ல உதாரணம் பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளயரின் கூற்று. வெளி நாடுகளைச் சேர்ந்த சுமார் 75 ஆயிரம் மாணவர்களை தமது நாட்டு பல்கலைக் கழகங்களில் உயர் படிப்பைத் தொடர்வதற்கு அனுமதிக்கப் போவதாக அவர் அண்மையில் தெரிவித்தார்.

உலகெங்கும் உள்ள அறிவாளிகளை பிரிட்டனுக்குள் உள்வாங்குவதன் மூலம்தமது நாட்டையும் பொருளாதாரத்தையும் அடுத்த நூற்றாண்டிலும் சிறந்த முறையில் வளர்ச்சி அடையச் செய்ய முடியும் என்று அவர் கருதுகிறார். ஏனெனில் அடுத்த நூற்றாண்டில் சகலதையும் கல்வியே தீர்மானிக்கும்.

எதிர்காலத்தில் எமது நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கப்போவது கல்வி அறிவே. ஒருவன் உயர்கல்வியைப் பெறவில்லை என்றால் அவன் சமுதாயத்தின் நீரோட்டத்தில் இணைந்து கொள்ள முடியாமல் பின் தங்கி நிற்க வேண்டி ஏற்படும்

இன்றைய வாழ்வில் வாழ் நாள் முழுவதுமே உயர் கல்வியை பெறவேண்டியவர்களாக இருக்கின்றோம். கரு முதல் கல்லறை வரை கல்வியைத் தொடர வேண்டிய நிலையேஏற்பட்டுவருகின்றது

இந்த நிலையில் எமது பல்கலைக்கழகம் அடுத்துவரும் 25 ஆண்டுகளில் பாரிய சாதனைகளை நிலைநாட்டவேண்டிய தேவையுள்ளது. மக்களிடம் காணப்படும் துரித வளர்ச்சி, அவர்களின் அபிலாஷகள், தேவைகள் என்பவற்றை ஈடுசெய்யும் வகையில் எதிர்காலத்தில் நாம் செயற்பட வேண்டியிருக்கும். இவற்றையெல்லாம் ஈடுசெய்யும் வகையில் நாம் தயாராக உள்ளோமா?

எமது மக்கள் எல்லோரும் துணையாக நின்றால் நாம் இதில் வெற்றி பெறமுடியும். அடுத்தநூற்றாண்டுக்கு அதாவது மிலெனியம் நூற்றாண்டுக்கு ஏற்றபடி எம்மை நாம் தயார்படுத்திக் கொள்ள முடியும்.

இப்படிஅவர்தெரிவித்தார்.

இந்த வெள்ளி விழா நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் அருட்திரு அன்ரன் மத்தாயஸ், நல்லாயன் நடுநிலைய வழிகாட்டி அருட்திரு மா. றேஜுஸ் இராசநாயகம், [illegible] தம்பி ஆகியோரும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.

(இ-6)

# செய்திக் கொத்து

## வீதியை திருத்தக் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 6

தனங்களப்பு கிராம அலுவலர் பிரிவில் நீண்டகாலமாக பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்துள்ள கணேசா சனசமூக நிலையத்தைப் புனரமைக்குமாறும்— இந்தப் பகுதியின் பிரதான போக்குவரத்துப் பாதையான காரைத்தூர் பிள்ளையார் வீதியைத் திருத்தித் தருமாறும்— அந்தப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றை கிராம அலுவலர் க. பாலசிங்கத்தின் ஊடாக தென்மராட்சி பிரதேச செயலரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

(க-117)

## மாதர் சங்கம் அங்குரார்ப்பணம்

சுழிபுரம், ஜூலை 6

சுழிபுரம் கிழக்கு கிராம அலுலலர் பிரிவில் புதிகாக மாதர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் திருமதி குலவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்திம் புதிய உத்தியோகத்தர் தெரிவு இடம் பெற்றதுடன் சங்கச் செயற்பாடுகள் பற்றியும் ஆராயப் பட்டது. (க-28)

## 'கெயர்' உதவி

தென்மராட்சி, ஜூலை 6.

கெயர் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மறவன் புலோ பெரியதூவில் குளம் ஆழமாக்கப்பட்டு அணை கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மறவன்புலோ விவசாய சம்மேளனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வேலைத் திட்டத்தினால் சுமார் 300குடும்பங்கள் வரை நன்மையடையும் என சம்மேளனத்தலைவர் மா. லீலாவினோதன் தெரிவித்தார். [க-117-30]

## மணி மண்டபம் அமைப்பு

கொழும்புத்துறை, ஜூலை 6

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக மணி மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

மணி மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. [க-30]

## சொற்பொழிவு

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி தினமும் மாலை 7 மணி முதல் இரா. செல்வ வடிவேலினால் ''கந்த புராணம்'' என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு வருகின்றது. (க-100)

## புனரமைப்புப் பணி பூர்த்தி

மண்கும்பான் கிராம முன்னேற்றச் சங்கத்தின் கட்டடப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

1992 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது சேதமடைந்த இந்தக் கட்டடத்தைப் புனரமைக்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி பிரமாண அடிப்படையில் ஒரு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது.

புதிய கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (க-111)

## பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

தென்மராட்சி, ஜூலை 6

பளைப் பிரதேசத்தில் உள்ள குடியிருப்பாளர்களின் பங்கீட்டு அட்டைகள் பிரதேச செயலகஉத்தியோகத்தர்களால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கும் முகமாகப் பாவனையில் உள்ள பங்கீட்டு அட்டைகள் மீளப் பெறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

## பன்னிரு திருமுறை பாராயணம்

சுழிபுரம், ஜூலை 6

பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை முதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் காலை 10. 30 மணி முதல் ஒரு மணி வரை தினமும் படிக்கப்பட்டு வருகின்றது.

இந்தப்பாராயணப்படிப்புத் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு நடைபெறவுள்ளது. (க-28)

## நூலக அபிவிருத்தி தினம்

காரைநகர், ஜூலை 6

காரைநகர் வலந்தலை வடக்கு அ. மி. த. க. பாடசாலை நூலக அபிவிருத்தித் தினம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்குப் பாடசாலை அதிபர் திருமதி த. நாகரத்தினம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எல். ஆர். எஸ். தேவதாசன், தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்கள், தீவக கல்வி வலய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். (க-73)

## புனரமைப்பு

காரைநகர் ஜூலை 6

காரைநகர் வலந்தலை வடக்கு அ. மி. த. க பாடசாலையின் அதிபர் காரியாலயம் 'போரூட்' நிறுவனத்தினால் சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் தரம் ஒன்றுக்கான வகுப்பறை 90 ஆயிரம் ரூபா செலவில் கல்வித்திணைக்களத்தால் அமைக்கப்பட்டு வருகின்றது. (க-73)

## தொற்று நீக்கும் கருவி வழங்கப்பட்டது

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு நவீன தொற்றுநீக்கிக்கருவி ஒன்று மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (க-171)

## பாலர் பகல் விடுதி

சுன்னாகம், ஜூலை 6

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் பாலர் பகல் விடுதி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள பெண்கள் வேலையின் நிமித்தம் தமது பிள்ளைகளைப் பராமரிக்கச் சிரமப் படும் நிலையைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாகத் தெரியவருகிறது. (க-27)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1970 – 10 – 25 | 1995 – 06 – 20 |

## திருமதி கலாநந்தினி

திதி: 06 – 07 – 99

எங்கள் அருமைக் கலாவே – நீ
உன் சிசுவைப் பெற்றெடுக்கும் வேளையிலே
பாதகனால் சாகடிக்கப்பட்டாய் அம்மா!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினமும் வேண்டுகின்றோம்.

பெற்றோர், சகோதரர்,
அண்ணிமார், மருமக்கள்.

பலாலி வீதி,
ஆலடிச் சந்தி,
கந்தர்மடம்.

[ 67129 ]

# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 – 02 – 1963 | 17 – 07 – 1998 |

## திருமதி ஜெகநாதன் சாந்தகுமாரி

(சாந்தா)

(தட்டெழுத்தாளர், A.G.A OFFICE, நானாட்டான்)

திதி: 06–07–1999

கொஞ்சும் மொழி மழலைகள் மூன்றும் தங்கள் முகம் காணாமல் இருக்க எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட சாந்தாவே!

உங்கள் நினைவில் வாழும்
கணவன். பிள்ளைகள், தாய், சகோதரர்கள்,
மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்.

''கமல கிரி''
சங்குவேலி, மானிப்பாய்.

(67180)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16 – 08 – 1926 | 06 – 06 – 1999 |

## அமரர் ஆறுமுகம் ஐயாத்துரை

இன்று 06 – 07 – 1999 செவ்வாய்க்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்

யார்க்கரு வீதி,
கரவெட்டி கிழக்கு.

(67163)

## மீன்பிடி உபகரணங்கள்

வடமராட்சி, ஜூலை 6

மயிலிட்டித்துறையிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் மீனவர்களில் 50 பேருக்கு சுழற்சி முறையில் தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் கடனாக வழங்கப்பட்டன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக இந்தக் கடனை வழங்கியது.

[இ–173]

## நீர் இறைக்கும் இயந்திரங்கள்

வலி. கிழக்கு, ஜூலை 6

சீடா நிறுவன உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு 200 நீர் இறைக்கும் இயந்திரங்கள் கடன் அடிப்படையில் யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்களம் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

(இ–180)

## ஐ. நா. தூதரகம் உதவி

சங்கானை, ஜூலை 6

வன்னியில் இருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு அகதிக்கான ஐ. நா. தூதரகத்தினால் சங்கானையில் பிளாஸ்ரிக் வாளி, பாய், படங்கு போன்றவை வழங்கப்பட்டன.

[இ-29]

## விவரங்கள் சேகரிப்பு

வலி.வடக்கு, ஜூலை 6

யாழ். மாவட்டத்தில் முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பற்றிய விவரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சேகரிக்கப்பட்டு வருகின்றன.

முறை சாரக் கல்வி சிறுவர் செயற்றிட்டத்தின் கீழ் பெறப்படும் இந்த விவரத்தின் கீழ் அடுத்த ஆண்டு பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் மாணவர்கள் பற்றிய விவரங்களும் பெறப்பட்டு வருகின்றன. [இ-86]

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 6

இலங்கை வலைப்பந்தாட்ட சங்க அனுசரணையுடன் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பான விவரங்களை யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தில் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ–க)

## நீதிவான் கண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை6

தேவையற்ற சிவில் வழக்குகளில் தலையிட்டு பொலீஸார் தமது கரங்களை கறைபடிய விடக்கூடாது என்று யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு ஆலோசனை வழங்கினார்.

பொய்யாக சிருஷ்டிக்கப்பட்ட ஆவனம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். சுமதிபாலாவை நீதிமன்றுக்கு நேரில் அழைத்த நீதிவான் இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

(இ–5)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

06—07—1999

''பாளையாந் தன்மை செத்தும்
பாலனாந் தன்மை செத்தும்
காளையாந் தன்மை செத்தும்
காமுறு மிளமை செத்தும்
மீளுமிவ்வியல்பு மின்னே
மேல்வரு மூப்புமாகி
நாளுநாட் சாகின்றாமா
னமக்கு நாமழாத தென்னொ''

–குண்டலகேசி–

எமது கல்வி நிலைய ஆங்கில ஆசிரியர்
திரு. ஐ. செல்வராசா
அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் ஆறுமுகம் ஐயாத்துரை

அவர்களின் 31 ஆவது நினைவு நாளில் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அமரரது ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– ரலன்ற் கல்வி நிலையத்தினர்.

கரவெட்டி.

[67164]

# விண்ணுலகில் முதலாம்ஆண்டு நிறைவு



| அன்னைக்கு | விண்ணுக்கு |
|---|---|
| 17 – 05 – 1925 | 06 – 07 – 1998 |

## மேரி திரேசா சிமியோன்


அன்னையே! எம் தாயே!
எம் கண்ணீர் யாத்திரை காணீர்
எம்மைக் கூட்டிச் செல் உன் பாதையிலே
எம்மைக் கூட்டிச்செல் உன் பாலே
இங்கு நாம் ஆனோம் அனாதை
தந்தாய் சோகமே தான்
சாகாமல் சாகிறோம் நாம்
கூண்டை விட்டோடும் உயிரே
எம்மைப் பழிவாங்கியது ஏனோ?

இவரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

963 / 07, வளன்புரம்,
யாழ்ப்பாணம்)

(சி/8059)

# 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 02 – 11 – 1912 | 27 – 07 – 1978 |

## Dr. சரவணமுத்து சோமசுந்தரம் (R.M.P)

(நல்லூர், செட்டிதெரு)

திதி: 06 – 07 – 1999

ஆண்டுகள் இருபத்தொன்று ஓடின இன்று
நீண்ட பலகாலம போயினும்
என்றுமே நெஞ்சை விட்டு அகலா உம் நினைவுகள்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்
மைத்துனர்.

''கிருஸ்ணா''
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(67120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போர்க்கணக்கும் போக்குவரத்தும்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தரை வழிப்பாதை இல்லாததால் இங்கு பொருள்களைக் கொண்டு வரவும் மற்றும் அரச போக்குவரத்துச் செலவாகவும் வருடாந்தம் 40 கோடி ரூபா செலவாகிறதாம்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஈழப்போர் இரண்டு தொடங்கிய சில மாதங்களிலேயே தரைவழிப்பாதை சிறிது சிறிதாகச் சுருங்க ஆரம்பித்து போக்குவரத்துக் கஷ்டம் பீடித்தது.

1995 ஒக்ரோபர் மாத இடம்பெயர்வுக்கு முன்னரே அரசு தருவிக்கும் பொருள்கள் கடல் மார்க்கமாகக் கொண்டு வரப்பட்டன. ஆகையால் இந்தச் செலவு இப்போது — இடம்பெயர்வுக்குப் பிந்திய மீளக்குடியேறிய காலப்பகுதியிலேயே — வந்தது என்பதல்ல,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு போர் நிறுத்தப்படும் வரை, தரைவழிப்பாதையைத் திறப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்று இராணுவ விமர்சகர்கள் அன்று தொடக்கம் கூறிவருகிறார்கள்; இப்போதும் அதனையே அவர்கள் சொல்கிறார்கள்.

குடாநாட்டுக்கான பிரதான போக்குவரத்துப் பாதையைத் (M.T.R.) திறப்பதற்கென்றே ''ஜெயசிக்குறு'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஒன்றரைவருடங்களுக்கும் அதிகமாக அந்த நடவடிக்கையைத் தொடர்ந்தபோதிலும் அரசபடைகளால் வவுனியாவில் இருந்து மாங்குளம் வரையான 40கிலோ மீற்றர் தூரத்தையே பிடிக்க முடிந்தது.

கடந்த மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட ''போர்க் கோஷம்'' இராணுவநடவடிக்கை மூலம் 1,500 சதுரகிலோ மீற்றர் விஸ்தீரணமுள்ள நிலப்பகுதியை அரச படைகள் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் குடாநாட்டுக்குத் தரைவழிப்பாதை ஒன்று இப்போதைக்குத் திறக்கப்படும் என்பதில் இராணுவ விமர்சகர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். அந்தச் சந்தேகத்துக்கு ஆதாரமாக அவர்கள் பல காரணங்களையும் முன் வைத்துள்ளார்கள்.

நிலைமை இப்படியிருக்க, குடாநாட்டுக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு வருவதற்கும் அரச போக்குவரத்துக்கும் வருடாந்தம் 40 கோடி ரூபா செலவாகிறது என்று கணக்குப் பார்ப்பதில் பயன் என்ன?

போருக்காக வருடாந்தம் 6,000 கோடி ரூபாவுக்கு அதிகமாகச் செலவாகும் போது அதனைக் கருத்தில் கொள்ளாது, 40 கோடி குறித்துப் பேசுவது, ஊசிபோகும் இடம் பார்த்துக் கொண்டு உலக்கை போகும் இடத்தைப் பார்க்காதிருப்பது போலாகும்.

இவ்வாறு கணக்குப் பார்ப்பதால் அர்த்தமற்ற போருக்குச் செலவிடும் பணம் திரும்பி வரப் போவதில்லை. அது வீணாகத் தரையில் ஊற்றப்பட்ட பால் போன்றதாகும்.

இத்தகைய அவச் செலவுகளை நிறுத்தி, பணம் சேமிக்க வேண்டுமெனின் போரை நிறுத்துவது அவசியம்; கட்டாயம். குடாநாட்டுப் போக்குவரத்துக்குச் செலவாகுவது போன்று எத்தனையோ வழிகளில் எல்லாம் நாட்டின் நிதி வளம் போரினால் கரைந்து கொண்டிருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் நடைபெறும் ஈழப்போர் மூன்று ஆரம்பமாகி ஐந்து வருடங்கள் கழிந்தும் எந்த முடிவும் இல்லை; வெற்றியும் இல்லை; கண்ட மிச்சமும் ஒன்றுமில்லை.

அரசு இந்தஒவ்வாதநிலையை மாற்றுவது குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டும். தேர்தல்நெருங்கி வருவதனை மனதிற் கொண்டாவது போரை நிறுத்துவதற்கு முன்வருமா?

## வெற்றிலை வியாபாரத்தில் பொலிஸ் அதிகாரியாம்

கொழும்பு, ஜூலை 6 உயர்மட்டப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வெற்றிலை அனுப்பும் வியாபாரம் செய்தார் என்ற தகவல் தற்சமயம் வெளியாகியுள்ளது.

கொழும்பில் இருந்துயாழ்ப்பாணத்துக்கு விமானமூலம் வெற்றிலையை எடுத்துச் செல்ல அவர் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளைப் பயன்படுத்தினார் என்ற தகவலும்— பொலிஸ் வாகனத்தைப் பயன்படுத்தி வெற்றிலையை அவர் சேகரித்து வந்த தகவலும்—தற்சமயம் வெளியாகியுள்ளனவாம்.

இவருக்கு உதவி செய்து வந்ததாகக் கூறப்படும் பொலிஸ் அதிகாரி அண்மையில் தாக்குதல் ஒன்றில் உயிரிழந்தார் என்றும் கூறப்படுகின்றது. (இ-3-8)

## நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

மூளாய், ஜூலை 6 வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கும் படி வலிகாமம் மேற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுவது என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ-99)

## 10 பட்டதாரி பயிலுநருக்கு திணைக்களங்களில் நியமனம்

வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் அபிவிருத்தி அலுவலர்களாக கடமையாற்றிய 10 பட்டதாரி பயிலுநர்களும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி திணைக்களங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று உள்ளூராட்சி ஆணையாளர் கே சபாபதிப் பிள்ளை தெரிவித்தார்.

மேற்படி பத்து அபிவிருத்தி அலுவலர்களும் பின்வரும் உள்ளூராட்சித் திணைக்களங்களில் இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து நியமனம் பெறுகின்றனர்.

அவர்களின் பெயர் விவரமும் அவர்கள் நியமனம் பெறும் இடங்களும் வருமாறு:

செல்வி கே. தயாராணி (நகரசபை— சாவகச்சேரி), ரி. சிறிமுரளிதரன் (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்.), கே. கனகதுரை (பிரதேச சபை-சாவகச்சேரி), திருமதி எஸ். ஜெயந்தா (பிரதேசசபை-வலி.மேற்கு), எஸ். ரமேஷ் (பிரதேச சபை- வலி. தென் மேற்கு), ஆர். சுப்பிரமணியம் (நகரசபை-பருத்தித் துறை), ஆர். அறிவரசன் (மாநகரசபை-யாழ்.), செல்வி ஜே.பேரின்பநாயகி (பிரதேச சபை- வலி. கிழக்கு), ஏ. கமலேஸ்வரசர்மா (பிரதேச சபை- நல்லூர்), செல்வி கே. நாகவதனி (பிரதேச சபை- பச்சிலைப்பள்ளி). (இ-185)

## கசிப்புஉற்பத்தி,விற்பனை நால்வருக்கு அபராதம்

வல்வெட்டித்துறைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியிலும், விற்பனையினும் ஈடுபட்ட நால்வருக்கு மொத்தம் 21 ஆயிரம் ரூபாவை தண்டப் பணமாகவும் 3 ஆயிரம் ரூபாவைத் தருமப் பணமாகவும் செலுத்துமாறு பருத்தித் துறை மாவட்ட நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார்.

வன்னிச்சி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த ச. ஸ்ரீஸ்குமாரிடமிருந்து 24 கிராம் கசிப்பையும், ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையில் நா. அருளானந்தம் வீட்டிலிருந்து 20 கிராம் கசிப்பையும்மேலும் இதே இடத்தைச் சேர்ந்த ச. துரைசாமி என்பவரிடம் இருந்து 22 கிராம் கசிப்பையும், இமையாணனைச் சேர்ந்த சி. செல்லத்துரை என்பவரிடமிருந்து 10 கிராம் கசிப்பையும் வல்வெட்டித் துறை பொலீஸார் கைப்பற்றியிருந்தனர்.

சந்தேக நபர்களை கடந்த வாரம் வல்வெட்டித்துறை பொலீஸார் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்திருந்த சமயம் முதலாவது சந்தேக நபருக்கு தண்டப்பணமாக ஆயிரம் ரூபாவும், தருமப் பணமாக வதிரி ஆனந்தா ஆச்சிரமத்துக்கு ஆயிரம் ரூபாவும்,

2 ஆம், 3 ஆம் சந்தேக நபர்களுக்கு தண்டப் பணமாக தலா 5 ஆயிரம் ரூபாவும் தருமப்பணமாக வதிரி ஆனந்தா ஆச்சிரமத்துக்கு தலா ஆயிரம் ரூபாவும்

4 ஆம் சந்தேக நபருக்கு தண்டப்பணமாக 10 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டு கைப்பற்றிய கசிப்பை முற்றாக அழிக்குமாறு உத்தரவிட்டார். (இ-109)

## காங்கேசனுக்கு விஜயம்

யாழ்ப்பாணம். ஜூலை6 மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி எஸ். ஸ்ரீதரன் நாளை 7 ஆம் திகதி காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்யவுள்ளார். (இ-5-6-)

## நாளை

ஆனி 23

புதன்கிழமை

திதி: நவமி

முன் இரவு: 10.36 வரை

நட்சத்திரம்: ரேவதி

முற்பகல் 7.35 வரை.

சுபநேரம்: 4.28 – 5.58

ராகுகாலம்: 11.58 - 1.28

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நன்மை தீமைகளைக் கேட்டு அறிந்து நடக்கத் தெரியாதவர்களுடைய சொற்களைக் கேட்க நேர்ந்தால் அதனைப் பொருட்படுத்தாமல் இருந்து விடுங்கள்.

— பழமொழி நானூறு

## சுழற்சி முறையில் கடன்

தென்மராட்சி ஜுலை 6 அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தினால் பளைப் பிரதேசத்தில் உள்ள புலோப்பளை மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த இளம் பெண்களின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு சுழற்சி முறையில் கடன் வழங்கப்பட உள்ளது.

ஜுலை 12 ஆம் திகதி புலோப்பளை மேற்கு கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் 50 யுவதிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர்.

அன்றைய தினம் புலோப்பளைப் பகுதியைச் சேர்ந்த தாய்மாருக்கான போசாக்கு கருத்தரங்கும் நடத்தப்படவுள்ளது. [இ-117]

## வாசகர் திருமுகம்

## கலைஞனின் கவனம் கலையம்சத்திலேயே...

உதயன் 22 . 6 . 1999 ஆம் திகதி இதழில் வெளியான 'வீடியோ விருந்தாந்தம்' வாசகர் திருமுகத்தை எழுதிய கோப்பாயைச் சேர்ந்த ராஜனை விளித்து எழுதப்பட்ட மடல் இது.

ஒவ்வொருவரும் தனது தொழிலை சிறப்பாக செய்ய விரும்புவான். வீடியோ, புகைப்படம் என்பவை கலையம்சமான தொழில். கலையம்சத்துடன் அமைய வேண்டும் என்று விரும்புவார்கள் அத்தொழிலை செய்பவர்கள். தாங்கள் கூறிய காரணங்கள், எரிச்சல் நிலையில், சினத்தால் வந்தவை; அறிவு பூர்வமாக சிந்தித்து பிரச்சினையை எழுதியதாக தெரியவில்லை. ஏதோ பல்கலைக்கழக பேராசிரியர், விரிவுரையாளர், கச்சேரி உயர் அதிகாரிகள் சகிதம் முக்கிய விடயம் கதைத்துக் கொண்டிருந்த போது நீங்களும் ஏதோ கதைப்பதற்கு அருகில் சென்ற நேரத்தில், வீடியோ எடுப்பவர் அப்படிக் கூறியது உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதுதான் உண்மை என்பது வாசகர் திருமுகத்தில் குறிப்பிட்டவிடயங்களில் இருந்து தெளிவாகின்றது.

கலைஞனின் கண்களுக்கு பேராசிரியர், விரிவுரையாளர், கச்சேரி உயர் அதிகாரி என்று தெரியாது. அவர் வீடியோ படமாக்கும் போது கலையம்சத்தோடு தான் பார்ப்பார். அப்படிப் பார்த்தால்தான் அதில் அழகு இருக்கும்: காட்சியிருக்கும்; பிரதிமையிருக்கும். அவர் தன் தொழிலடிப்படையில் செயல்பட்டிருக்கிறார். அதில் ஒரு தப்பும் இல்லை.

பல்கலைக்கழக பேராசிரியர், விரிவுரையாளர், கச்சேரி உயர் அதிகாரி என்றும் பட்டியல் போட்டு எழுதியுள்ளீர்கள் ஐயா, இன்றைக்கு யாழ்ப்பாணத்து மக்கள் கொடிய யுத்தத்தால் இடம்பெயர்ந்து அகதிகளாக அலைந்து திரிகிறார்கள். இன்னும் தங்கள் சொந்த வீட்டிற்கு போய்வர, குடியிருக்க முடியவில்லை. புனர் நிர்மாணம். புனரமைப்பு, மீளக்குடியமர்த்தல், தொழில் முயற்சி. விதவைகள், அநாதைகள், காணாமற்போனோர் என்று நமக்கு பல பிரச்சினைகள் உண்டு நீங்கள் கூறும் பல்கலைக்கழக அறிஞர்கள் என்ன திட்டத்தை தீட்டி வைத்திருக்கிறார்கள்? எமது மக்களுக்கு முதலில் என்ன வேண்டும்; எதைச் செய்ய வேண்டும் என்று ஒரு சிறு பட்டியல் தன்னிலும் போட்டு ஆராய்ந்து வைத்திருக்கிறார்களா?

கச்சேரி உயர் அதிகாரிகள் என்னத்தைச் செய்து முடித்தார்கள்? வடக்கு – கிழக்கு ஆளுநர் வந்த போது கையளிக்க ஓர் அறிக்கை தயாரில்லை! கண்ணாடியறை, தொலைபேசி, குளிரூட்டிய சொகுசு வாகனம் என்றுதான் போகுதே தவிர புனர்நிர்மாணம், புனரமைப்பு இல்லை. இன்றைக்கு மூன்று வருடம் கழிந்து விட்டன என்னையா. அப்படி மங்கள நிகழ்ச்சியில் பேராசிரியர், கச்சேரி உயர் அதிகாரி சகிதம் முக்கியமான விடயம் பேசினீர்கள்? ஏதோ பெரிதாக வீடியோக்காரர் அநாகரிகமாக நடந்தார் என்றவாறு அப்பாவிக் கலைஞன் மீது வசைபாடி எழுதியுள்ளீர்கள். முக்கியமான விடயம் நல்லவிடயம் என்றால் வாசகர் திருமுகத்தில் அதனையும் சேர்த்திருக்கலாமே.

இவன் வீடியோக்காரன் எங்களுக்கு என்ன சொல்வது என்ற மாதிரி நீங்கள்தான் அதிகாரத்தனம் பண்ணுவது போல உங்கள் திருமுகம் அமைந்துள்ளது.

நன்றி ஐயா. முகம் தெரியாத உங்களை விமர்சிக்க நான் எண்ணவில்லை. உங்களுடைய ''வீடியோ விருந்தாந்தம்'' வாசகர் திருமுகம் பகுதி கருத்துக்கள் எனது மனச்சாட்சியை விடவில்லை. என்னுடைய கருத்தை எழுதியிருக்கிறேன். நான் ஒரு வீடியோக் காரரோ, புகைப்படப் பிடிப்பாளரோ அல்லன்.

கு. கபிலன்

மட்டுவில் கிழக்கு.

## எமக்குச் சம்பந்தமில்லை

உதயன் 22-06-99 ஆம் திகதி இதழில் வெளிவந்த ''வீடியோ விருத்தாந்தம்'' என்ற வாசகர் திருமுகத்தில் ''ஒளிபருவி'' என்ற சொற்றொடர் காணப்பட்டது. எமது வீடியோ நிறுவனத்தின் பெயரும் அதுவே என்பதால் அச்சொற்றொடர் எமது நிறுவனத்தையே குறிப்பதாக வாசகர்கள் தப்பான அபிப்பிராயம் கொள்ளக்கூடும். ஆனால் எமக்கும் திருமுகத்தில் எழுதப்பட்ட சம்பவத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதனை அறியத் தருகின்றோம். ஒளிக்கதிர் என்றகருத்திலேயே அச்சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வெ. கேதீஸ்

கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ம'வட்டத்துக்கு 1,850 புசல் விதைநெல்

யாழ்ப்பாணம், ஜுலை 6

யாழ். மாவட்டத்துக்கு கொழும்பிலிருந்து ஆயிரத்து 850 புசல் விதை நெல்லைக் கொண்டு வருவதற்கு விவசாயத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்பகுதியிலுள்ள 5 பண்ணைகளிலிருந்து பெறப்பட்ட இந்த விதைநெல் தற்பொழுது நிக்கவெரட்டிய பண்ணையில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பண்ணையில் வைக்கப்பட்டுள்ள விதைநெல்லில் முளைத்திறன் பரீட்சிக்கப்பட்டு விவசாய திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட பின்னரே இந்த நெல் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட விதை நெல்லில் முளைத்திறன் குறைவாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே விதை நெல் பரீட்சிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்துக்கு 5 ஆயிரத்து 500 புசல் விதை நெல் தேவைப்பட்ட போதும் ஆயிரத்து 850 புசல் விதை நெல் மட்டுமே கொண்டு வரப்படவுள்ளதால் ஏற்படக் கூடிய பற்றாக்குறை தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-5)

# வெளி நோயாளர் பிரிவுக்கு புதிய கட்டடம்

அளவெட்டி, ஜுலை 6

அளவெட்டி மத்திய மருந்தக மருத்துவமனைக்குவெளி நோயாளர் பிரிவுக்கான புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

தற்போது பிரசவ விடுதிக் கட்டடத்திலே செயற்பட்டு வரும் மருத்துவமனைபோதிய இட வசதி இன்றி இயங்கி வருகின்றது.

தெல்லிப்பழைபிரதேசசெயலர், மற்றும் கனடாவிலுள்ள அளவெட்டியைச் சேர்ந்த அன்பர்கள் ஆகியோர் வழங்கிய நிதியைக் கொண்டே வெளி நோயாளர் பிரிவுக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. (இ-13)

# ஆஸ்திரேலிய தூதரகக்குழு நாளை யாழ். வருகின்றது

யாழ்ப்பாணம், ஜுலை 6

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழு ஒன்று நாளை உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகிறது.

நாளை யாழ். செயலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குபற்றும் இந்தக் குழுவினர் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்கள்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டம், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் போன்றவற்றினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் இக்குழுவினர் பார்வையிடவுள்ளனர். (இ-5-6)

## ஆலயம் அமைப்பு

புலோலி மேற்கு ஸ்ரீ தெணியம்மன் கோயிலில் தற்போது புதிகாக தெற்குப் பக்கம் ஸ்ரீ விநாயகருக்கும் வடக்குப் பக்கம் ஸ்ரீ முருகப் பெருமானுக்கும் ஆலயம் அமைக்கப்பட்டு வருகிறது. (இ-30)

# கோயிலுக்கு புறப்பட்டவர் வீடு திரும்பவில்லை

நெல்லியடி, ஜுலை 6

கோயிலுக்கு அர்ச்சனை செய்யச் சென்ற இளைஞன் ஒருவன் மூன்று நாள்களாக வீடு திரும்பவில்லையென பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யயப்பட்டுள்ளது.

பருத்தித்துறை-சுப்பர்மடத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளியானபொன்னம்பலம் - ரகுநாதன்(வயது 17) என்பவரே காணாமற்போனவர் ஆவார்.

கடந்த 3 ஆம் திகதி காலை 8 மணிக்கு அவர் பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அர்ச்சனைசெய்யச்சென்றார் என்றும் —

அதன் பின்பு இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் — அவரது தந்தை பொன்னம்பலம் நேற்றுக்காலை பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். (இ-109)

# ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை - 1999

## நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் | நேரம் | பாடம் |
|---|---|---|---|---|
| 02—08—1999 | 9.00 — 12.00 | தூய கணிதம் - I<br>சங்கீதம் - கீழைத்தேசம் I<br>சங்கீதம் - கர்நாடகம் I<br>சங்கீதம் - மேலைத்தேச I | 13.00 — 15.00<br>13.00 — 16.00 | தாவரவியல் I<br>பொருளியல் I<br>பகுதி II 13.00 — 15.00<br>பகுதி I 15.00 — 16.00 |
| 03—08—1999 | 9.00 — 12.00 | தாவரவியல் II<br>பொருளியல் II<br>பகுதி II — 9.00 — 11.00<br>பகுதி I — 11.00 — 12.00 | 13.00 — 16.00 | தூயகணிதம் II<br>நாட்டியம் - பரதம் I |
| 04—08—1999 | 9.00 — 11.00<br>9.00 — 12.00 | பௌதிகவியல் I<br>கணக்கீடு I | 13.00 — 16.00 | நாட்டியம் - பரதம் II |
| 05—08—1999 | 9.00 — 12.00 | பௌதிகவியல் II<br>கணக்கீடு II<br>சித்திரக்கலை I | 13.00 — 15.00<br>13.00 — 16.00 | விவசாய விஞ்ஞானம் I<br>சங்கீதம் - கீழைத்தேசம் II<br>சங்கீதம் - கர்நாடகம் II<br>சங்கீதம்-மேலைத்தேசம் II |
| 06—08—1999 | 9.00 — 12.00 | சிங்களம் I | 14.00 — 17.00 | விவசாய விஞ்ஞானம் II |
| 07—08—1999 | 9.00 — 12.00 | கணிதம் I<br>சித்திரக்கலை II<br>ஆங்கிலம் I | 13.00 — 16.00 | இந்து நாகரிகம் I |
| 09—08—1999 | 9.00 — 12.00 | சிங்களம் II | 13.00 — 16.00 | வணிகக்கல்வி I<br>பகுதி II 13.00 — 15.00<br>பகுதி I 15.00 — 16.00 |
| 10—08—1999 | 9.00 — 12.00 | கணிதம் II<br>சித்திரக்கலை III<br>ஆங்கிலம் II | 13.00 — 16.00 | வணிகக்கல்வி II<br>பகுதி II 13.00 — 15.00<br>பகுதி I 15.00 — 16.00 |
| 11—08—1999 | 9.00 12.00 | புவியியல் I | 13.00 — 16.00 | இந்துநாகரிகம் II |
| 12—08—1999 | 9.00 — 12.00 | புவியியல் II<br>பகுதி II — 9.00 — 11.00<br>பகுதி I 11.00 — 12.00 | 13.00 — 16.00 | அளவையியலும் விஞ்ஞானமுறையும் I |
| 13—08—1999 | 9.00 — 12.00 | புவியியல் III<br>பகுதி II 9.00 — 11.00<br>பகுதி I 11.00—12.00 | 14.00 — 17.00 | அளவையியலும் விஞ்ஞானமுறையும் II |
| 14—08—1999 | 9.00 — 11.00<br>9.00 — 12.00 | விலங்கியல் I<br>பிரயோக கணிதம் I<br>வரலாறு I<br>பகுதி II 9.00 — 11.00<br>பகுதி I 11,00 — 12.00 | 13.00 — 16.00 | மனைப்பொருளியல் I |
| 16—08—1999 | 9.00 — 12.00 | விலங்கியல் II<br>பிரயோக கணிநம் II | 13.00 — 16.00 | வரலாறு (இந்திய) II<br>வரலாறு (ஐரோப்பிய) II<br>பகுதி II 13.00 — 15.00<br>பகுதி I 15.00 — 16.00 |
| 17—08—1999 | | | 13.00 — 16.00 | மனைப்பொருளியல் II |
| 18—08—1999 | 9.00 — 11.00<br>9.00 — 12.00 | இரசாயனவியல் I<br>தமிழ் I | | |
| 19—08—1999 | 9.00 — 12.00 | இரசாயனவியல் II<br>தமிழ் II | | |
| 20—08—1999 | 9.00 — 12.00 | அரசியல் மூலதத்துவங்கள் I<br>பகுதி II 9.00—11.00<br>பகுதி I 11.00—12.00 | 14.00 — 17.00 | நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I |
| 21—08—1999 | 9.00 — 12.00 | அரசியல் மூலதத்துவங்கள் II<br>பகுதி II 9.00—11.00<br>பகுதி I 11.00—12.00 | 13.00 — 16.00 | இந்துசமயம் I<br>கிறிஸ்தவம் I<br>சமஸ்கிருதம் I |
| 23—08—1999 | 9.00 — 12.00 | வணிகப்புள்ளிவிவரவியல் I<br>நாடகமும் அரங்கியலும் [தமிழ்] II | 13.00 — 16.00 | இந்துசமயம் II<br>கிறிஸ்தவம் II<br>சமஸ்கிருதம் II |
| 24—08—1999 | 9.00 — 12.00 | வணிகப்புள்ளிவிவரவியல் II<br>நாடகமும் அரங்கியலும் [தமிழ்] III | | |

## கருத்தரங்கு

புங்குடுதீவுப் பகுதியில் வசிக்கும் விவசாய பெருந்தோட்ட, வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வுகள் வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உபஅலுவலகப் பணிமனையில் புங்குடுதீவு தென்மேற்கு கிராம அலுவலர் எஸ். பி. விநாயகமூர்த்தி, புங்குடுதீவு மத்தி கிராம அலுவலர் இ. ரமேஸ் ஆகியோர் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பயிர்ச் செய்கை பற்றிய பயிற்சி விளக்கங்களை வழங்குவதற்காக உதவி விவசாயப் பணிப்பாளர் விரிவாக்க உத்தியோகத்தர் த. சிவலோகநாதன், உதவி விவசாய பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் எஸ். சின்னத்துரை, பாட விதான உத்தியோகத்தர் கா. நல்லதம்பி, விவசாயப் போதனாசிரியர் செல்வி ஈ. எஸ். சொலமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கூடுதல் விலையில் அரிசி

வலிகாமம். மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தனியார் கடைகளை விட கூடுதல் விலையில் அரிசி விற்கப்படுகிறது.

வலிகாமம் மேற்கு பிரதேச இணைப்புக் குழுக் கூட்டத்தில் வலி. மேற்கு பிரதேச செயலரின் கவனத்துக்கு இது கொண்டு வரப்பட்டது.

கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 39 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வரும் குத்தரிசியை தனியார் கடைகளில் 38 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது என்று இந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. (இ-99)

## திறப்பு விழா

வடமராட்சிப் பகுதியிலுள்ள வியாபாரி மூலையில் பாலர்பாடசாலைக் கட்டடம் ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி காலை 8 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ, சிவசுவாமியினாற் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் திறப்பு விழாவில் யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் ஏ. யோசெப், பருத்தித்துறை பங்குத் தந்தை பி. எம். இம்மனுவேல் உட்பட பலர் கலந்து கொள்வர்,

மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க ஆதரவில் இது இடம் பெறுகிறது.

## சமய சந்நிதிகளில்

அல்வாய் வடக்கு ஆதிசிவ வீரபத்திரசுவாமி கோயில் வருடாந்த மணவாளக்கோல விழாவும் சங்காபிஷேகமும் இன்று நடைபெறும். (க-173)

★ ★ ★

அளவெட்டிமேற்குகாட்டுப் புலம் காளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை மாலை விசேட பூசைகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி காலை பொங்கல் விழா நடைபெறவுள்ளது. (க-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரூஜன் கொமினிகேஷன் & போட்டோ ஸ்ரற்

FAX I.D.D,
T.P. No. 0094 - 21 - 2961
போட்டோ பிரதி A4 அளவு ரூ. 2.50

குறைந்த செலவில் நிறைந்த சேவை!

சாரூஜன் கொமினிகேஷன் & போட்டோ ஸ்ரற்
கே, கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.
(சி/8098)


எழுத்தாளர்

## வரதருக்கு இனிய பவள விழா வாழ்த்து

★★★★★



''வரதர்'' என்ற நாமம் ஈழத்து இலக்கிய
வரலாற்றிலே உன்னதமான இடத்தைப்
பெற்றுள்ள நாமம்.
சமூக நலனுக்காக உயர்ந்த கருத்துக்களை
சிறு கதைகள், நாவல்கள், கட்டுரைகள் மூலம் நல்கி
அறிவுடையார் பலரின் பாராட்டைப்
பெற்றவர் வரதர்.
சொல்லும் செயலும் சிந்தையும் ஒன்றுபட
வாழ்ந்து வருபவர் வரதர்.
பவளவிழாக் காணும் இப்பெரியாரைப்
பாராட்டி வாழ்த்துவதில்
எமது தேவஸ்தானமும் நானும்
பெருமை அடைகின்றோம்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

[சி/8096]

யாழ். பல்கலைக்கழக
முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்

## பொதுக் கூட்ட அறிவித்தல்

காலம்:- 07—07—99 புதன்கிழமை பி. ப. 5.00 மணி
இடம் :- முகாமைத்துவ மண்டபம்

அனைத்து முல்லை மாணவர்களையும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(67223) செயலாளர்

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கானை அஞ்சலக உதவித் தபாலதிபர்
திரு. தி. விஜயநாதன் அவர்களின்
அன்புத்தாயார்

### திருமதி தில்லைநாதன் வேலாசிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தபாலதிபரும் சக ஊழியர்களும்
அஞ்சலகம், சங்கானை.

[67219]

## ஈராண்டு நினைவஞ்சலி

### திருமதி இந்திராணி நவரட்ணம்

மலர்வு; 22 – 07 – 1933 உதிர்வு; 27 – 06 – 1997

குடும்பத்தின் குலவிளக்காய் அவதரித்த செல்வமே!
கணவனுக்கினிய மனைவியாய்
பிள்ளைகளுக்குப் பாசத்தின் உறைவிடமாய்
இரவு பகல் கண்ணுறக்கமின்றிக் காத்த எம் அன்னையே!
போற்றுகின்றோம் உம்மை சிரம் தாழ்த்தி
வணங்குகின்றோம்.

கணவன், மக்கள், சகோதரர்கள்,
மருமக்கள், மைத்துனிகள், பேரப்பிள்ளைகள்.

ந. குணபாலன்
156, கோவில் வீதி, நல்லூர். (67224)

## அறநெறிப் பாடசாலை

அரியாலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பரிபாலன சபையின் ஆதரவில் அறநெறிப் பாடசாலை ஒன்று மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இளைப்பாறிய அதிபர் க. இராமலிங்கம் இதற்கான சகல ஒழுங்குகளையும் செய்து வருகின்றார். (உ-30)

## சாரணீய ஒன்றுகூடல்

சாரணீய ஒன்றுகூடல் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9மணி முதல் பிற்பகல் 3மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் மூன்று சாரணீகளுக்கான பாசறை விண்ணப்பங்களே ஏற்கப்படும் என்று சாரணீய மாவட்ட ஆணையாளர் திருமதி கி. சிவராஜா அறிவித்துள்ளார். (உ-3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல் 1998

கலாநிதி/ முதுமெய்யியல்மாணி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1997/98 ஆம் கல்வியாண்டுக்குப் பின்வரும் பாடநெறிகளுக்குப் பட்டப்பின் படிப்பிற்காகத் தகுதி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கிறிஸ்தவ நாகரிகம், வர்த்தகம், பொருளியல், கல்வியியல், புவியியல், இந்து நாகரிகம், வரலாறு, மொழியியல், முகாமைத்துவம், மெய்யியல், அரச அறிவியல், சமூகவியல், தமிழ்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 100 செலுத்திப்பற்றுச்சீட்டைக் கல்விக்கிளை, உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 100 இற்கான காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன், 3 ரூபா 50 சதம் பெறுமதியுள்ள முத்திரையொட்டிய சுய விலாசமிடப்பட்ட தபால் உறையையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை 1999.08.17 ஆம் திகதிக்கு முன்பாக உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 1999.08.17 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1999-07-06
[சி/8094]

அரசு சமர்ப்பித்துள்ள

# தீர்வு யோசனை குறித்து குடாநாட்டிலும் ஆய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயங்களைப் பெறும் நோக்கில் இங்கு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது.

தெற்கில் இத்தகைய ஆய்வை நடத்தி வரும் வர்த்தகர்கள் கூட்டமைப்பான சமாதானத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்குமான தேசிய சமாதானக் குழு யாழ்ப்பாணத்திலும் தனது ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆய்வுக்காக அந்த அமைப்புத் தனது கேள்விக் கொத்தைத் தமிழிலும் தயாரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவுக்கு இந்தக் கேள்விக் கொத்துக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இனப்பிரச்சினைத் தீர்வு, அரசு முன்வைத்துள்ள தீர்வுப்பொதி, காணி மற்றும் பொலீஸ் அதிகாரங்கள் தொடர்பான கேள்விகள் அதில் இடம்பெற்றுள்ளன.

மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்பு நிர்வாகிகள். ஆசிரியர் கலாசாலை, பல்கலைக்கழகம் ஆகியவற்றின் விரிவுரையாளர்கள், மருந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திரவியம் செல்வநாயகம்

திருமதி திரவியம் செல்வநாயகம் 04 – 07 – 99 அன்று காலமானார்.

இவர் தம்பு செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், சக்திவேல், பாஸ்கரன் (பிரான்ஸ்), திருமதி மனோராஜன் வளர்மதி ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரட்ணம் (உரும்பிராய்) அவர்களின் அன்புத் தங்கையும், ஆர்த்திகா, அனுசிகா, சஞ்சீவன், லக்ஸ்மன், வசிதரன், சஜிகலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-7-99) காலை 8-00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தம்பு செல்வநாயகம்

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை. (67216)

## சின்னத்துரை சுந்தரராஜா

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தரராஜா 29—06—1999 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை இளையபிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வரும் குணமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிமுத்துத் தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற நடராஜா, காலஞ்சென்ற சேதுராஜா, காலஞ்சென்ற இராஜரட்ணம், கனகபூரணம், பரிமளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், விமலாதேவி குணசுந்தரி (நோர்வே), ஸ்ரீகலா (ஆசிரியை, வவு/விபுலாநந்த மகா வித்தி), சுந்தரகுமார் (கனடா), சுகுமார் (சுவிஸ்), சுவேந்திரகுமார் (கரசன்—எலக்ரிக்கல்), சுகந்தகுமார் (இந்தியா), சுகிந்தகுமார் (பெக்கோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம் (நோர்வே), சுரேஸ் (வெளிக்கள உத்தியோகத்தர் சேவாலங்கா-வவுனியா), இளங்கோமதி (இந்தியா), ஜெயசோதி ஆகியோரின் அன்பு மாமனாரும் சும குமார், சுதனகுமார், சஜிதா, புருஷோத்தமன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 7—7—99 புதன்கிழமை மு. ப. 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகத் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சுவேந்திரகுமார்
(மகன்)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (67214)

## திருமதி இராசாத்தி திருநாவுக்கரசு

சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசாத்தி திருநாவுக்கரசு 4 – 7 - 99 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், திருமதி வாசுகி, திருமதி வத்சலா ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன், சுரேஷ் ஆகியோரின் அன்பு மாமியாரும், மீனா, சுஜி, துஷான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பதிகளின் அன்பு மகளும், நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகளும், பொன்னம்பலம் (ஆஸ்திரேலியா) ஸ்ரீகரன் (சுதுமலை), காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், கெங்காதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (7-7-99) லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
அ. ஸ்ரீகரன்
(சகோதரன்)

சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை. (67218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிதிவெடிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்தியாளர்களுக்குக் காட்டப்பட்டது.

ஸிம்பாப்வேயைச் சேர்ந்த 'மைன்ரெக்' (MINE TEC) என்னும் நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு நிபுணர்களும் நான்கு நாய்ப்பராமரிப்பாளர்களும் இந்தப் பணிக்காக கொழும்பு வந்துள்ளனர்.

நாளை மறுதினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பல் மூலம் திருமலையில் இருந்து இவர்கள் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் குழுவின் பிரதிநிதியான ஜோன் டிக்ஷன் என்பவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகள் இருக்கும் இடங்களை இனங்காண ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் கேள்விப் பத்திரம் கோரியது. நாம் சமர்ப்பித்த கேள்விப் பத்திரத்துக்கு ஏற்ப இந்தப் பணி எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தப் பணியை மேற்கொள்ள 4 மோப்ப நாய்களையும் கொண்டு வந்துள்ளோம். அவற்றைப் பயன்படுத்தி கண்ணி மற்றும் மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் இடங்களை இனங்காணும் பணியை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்போம்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் எதிர்காலத்தில் கண்ணிகள் அகற்றும் பணி அடுத்த கட்டத்தில் இடம்பெறும் — என்றார்.

''இந்த நாய்கள் இலங்கைக் காலநிலைக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள சுமார் ஒருமாத காலம் செல்லும். இந்தப் பணி சுமார் ஆறு மாதகாலம் தொடர்ந்து நடக்கும்'' — என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கண்ணி வெடிகளை இனங்காணும் இந்தப் பணிக்கு மாதாந்தம் 40 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளோம் — என்றும் அவர் சொன்னார்,

செம்மணிப் புதைகுழிப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுவீர்களா? என அவரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ''அவசரமாக — அவசியமாக — அங்கு முதலில் கண்ணிகளை அடையாளம் காண்போம்'' என்று அவர் பதில் அளித்தார் (உ--3-9)

## மானிப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தக் குண்டு வெடிப்பால் பயிடனருக்கு ஏற்பட்ட சேதவிவரம் தெரியவரவில்லை.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் இடம் பெற்றது.

(உ-3-5-6-90-15-139)

## வேலணையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த விவகாரத்தில் தலையிட்டு மாணவ மாணவிகள் பாதுகாப்பாக கல்வி பயிலச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்று ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மாணவர்கள் சார்பில் அனுப்பப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்த மகஜரின் பிரதிகள் வேலணை உதவி அரச அதிபர், வேலணை பிரதேச சபைத் தலைவர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (உ-167-3)

## மாதோட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

காயமடைந்தவர்கள் வவுனியா, அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (உ-3-164)

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்)

மானிப்பாயில் நேற்றுக் காலை குண்டு ஒன்று வெடித்ததை அடுத்தும்—

பொதுமக்கள் தாக்கப்பட்டதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து சிறீதரன் நேற்று அங்கு சென்றார்.

அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் முறைப்பாடுகளைப் பதிவுசெய்தார்.

தாம் படையினரால் தாக்கப்பட்டதாக பலர் அவரிடம் செய்த முறைப்பாடுகளில் தெரிவித்துள்ளதாக அறிய வந்தது. [உ-3-5-6]

## குழி...

முதலாம் பக்கத் தொடர்)

வயர்கள் பரிசோதிக்கப்பட்டன.

சிவன்பண்ணை வீதியில் வெட்டப்பட்டு பின் உடன் மூடப்பட்டிருந்த குழி ஒன்றை அப்போது தோண்டிய சமயம் அதனூடாகச் செல்லும் கேபிள்கள் சேதமடைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது விடயமாக அந்தப் பகுதியில் விசாரித்தபோது —

அங்கு இன்று முற்பகல் இருவர் குழி வெட்டியதாகவும் —

அவர்கள் யார் என்ற விவரம் தெரியாது என்றும் —

அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம்—

இந்தக் கேபிள்கள் திருத்தப்பட்டு அனேகமாக இன்று மாலை மீண்டும் இணைப்புகள் வழங்கப்பட்டுவிடுமென்று ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# செயல்திட்டங்களைஒருங்கிணைக்க
# பிரதேச செயலர் பிரிவு ரீதியாக குழு!

மூளாய், ஜூலை 6

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு அமைய யாழ். மாவட்டத்தில்உள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் ஒருங்கிணைப்புக் குழுக்களின் செயற்பாட்டைத் துரிதப்படுத்துமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல பிரதேச செயலர்களுக்கும் பணிப்புரை செய்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு எல்லைக்குள்ளும் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியதாக — ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்குமான —பிரதேச ஒருங்கிணைப்புக் குழு செயற்படும். இந்தப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு மாதாந்தம் அமர்வுகளை நடத்தி குறிப்பிட்ட பிரதேசசெயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற செயல்திட்டங்கள் குறித்தும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய சாத்தியமான செயல் திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கும்.

ஏற்கனவே இவ்வாறான ஒருங்கிணைப்புக் குழுக்கள் செயற்பட்டு வந்தன.

எனினும் இவற்றின் செயற்பாட்டை கிரமமாக மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்குத் தற்போது பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

(உ-55)

## புளொட்...

[முதலாம் பக்கத் தொடர்]

வீடு அமைந்திருந்த பூந்தோட்டம், மகாரம்பைக்குளம், சாந்தசோலை ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் நேற்று அதிகாலை 6.00 மணி முதல் 8.39 மணிவரை வெளியே செல்ல பொலீஸார் அனுமதிக்கவில்லை. (உ-164-3)

## கரும்புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

மஞ்சள், சிவப்புக் கொடிகளால் அப்பிரதேசம் அலங்கரிக்கப்பட்டதுடன் ஆங்காங்கே பதாகைகளும் கட்டப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பல இடங்களிலும் பொதுக் கூட்டங்களும், எழுச்சிப் பேரணிகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

அதே நேரம் — மல்லாவியைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள் சைக்கிள் பவனி மூலம் போர் முனைகளுக்குச் சென்று அங்கு களத்தில் உள்ளோருக்கு இனிப்புப் பண்டங்களை வழங்கினர் என்றும் 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

(உ-3)

## நேபாளத்தில்...

[முதலாம் பக்கத் தொடர்]

காப்புடன் வரவேற்பு அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேபாளத்தில் வைத்து அவரைக் கொல்ல முயற்சி எடுக்கப்படலாம் என அஞ்சப்படுவதால் அவருக்கு அங்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3)

## மரங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இம்மரங்களைத் தறிப்பதற்கு எந்த வகையான முன் அனுமதியும் பெறப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-86)


எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு!

விஜய்யின்

நெஞ்சினிலே

ஒறிஜினல் வெளியீடுகள்!

★ உழவன்
★ கிழக்குக் கரை
★ பாட்டி சொல்லைத் தட்டாதே
★ பாலைவனச் சோலை

வீடியோ விமல்


# தூக்கத்திலிருந்த கணவனை கத்தியால் வெட்டிய மனைவி

தென்மராட்சி, ஜூலை 6

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த கணவனை கத்தியால் வெட்டிப் படுகாயப் படுத்தினாராம் மனைவி. படுகாயமடைந்த கணவன் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் அதிகாலை 5.00மணிக்கு மீசாலை வடக்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் துரைராசா சந்திரகுமார் (வயது 32) என்பவரே தலையில் பலத்த காயங்களுக்கு இலக்கானவராவார்.

இவரது மனைவி ஒரு மனநோயாளி எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-15-117]

# கட்டாக்காலி நாய்களால் வலி. மேற்கில் தொல்லை

மூளாய், ஜூலை 6

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதனால் கட்டாக்காலி நாய்கள் வீதிகள் தோறும் அலைந்து திரிகின்றன.

போதிய ஆளணி இல்லை என்றும் —

நாய்களைக் கொல்லும் ஊசி மருந்து இல்லை என்றும் —

இதனாலேயே இச்சேவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது என்றும் —

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் தினசரி அதிகரித்து வருவதாகவும்—

இதனால் சாத்தியமான மாற்று ஏற்பாடுகள் மூலமாக கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும்—

வலி. மேற்குப் பிரதேச செயலர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

# நிவாரணம்

அரியாலை, ஜூலை 6

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான 76 ஆவது ''ஏ பி'' புள்ளிக்கான உலர் உணவு விநியோகம் இவ்வாரம் முதல் ஆரம்பிக்கப்படும்.

பொருள்களை வழங்கும் பொருட்டு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கு பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக சங்கத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்தார். (இ-17)

## தீர்வு...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

துவர்கள், வங்கி அதிகாரிகள், அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இந்தக் கேள்விக்கொத்து அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு150படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும்—

குடாநாட்டு மக்களின் உணர்வலைகளை அறியவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது என்றும்—

தேசிய சமாதானக் குழு தெரிவித்துள்ளது. (உ-6)

## கொழும்பில்...

[முதலாம் பக்கத் தொடர்]

பகுதிகளிலும் தேடுதல்கள் இடம்பெற்றன.

குறிப்பிடத்தக்க சம்பவங்கள் ஏதும் இடம்பெறவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அதேநேரம்—

வவுனியா நகரில் நேற்று நண்பகல் பொலீஸார் பஸ்களில் வீதிகளில் வலம் வந்து, வீதியில் சென்ற இளம் வயதினரை ஏற்றி நகரசபை மைதானத்தில் இறக்கினர்.

அங்கு முகமூடி முன்னால் அவர்கள் நிறுத்தப்பட்டனர்.

இந்த நடவடிக்கையை அடுத்து ஐவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் நேற்று சோதனைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

(உ-3-86-164)

# நிதி உதவி

வன்னி மக்களின் துயர் துடைப்புப் பணிக்கென கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மூன்று இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

இந்த நிதி உதவியுடன் சேர்த்து வழங்குவதற்காக பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமும் 10 ஆயிரம் ரூபாவை கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனுக்கு அனுப்பிவைத்துள்ளது. (இ-173)

# மலசலகூட வசதி

அளவெட்டி, ஜூலை 6

சுன்னாகம் சந்தைப் பகுதியில் இரண்டு மலசல கூடத் தொகுதிகள் கட்டப்பட்டு வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன,

ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் அமைக்கப்பட்டு வரும் இந்த மலசல கூடத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் மூன்று அறைகள் அமைந்துள்ளன.

மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, வாழைக் குலைச் சந்தை, சுன்னாகம் பஸ் தரிப்பு நிலையம் ஆகியவற்றுக்கு வந்து போவோர் இப் பகுதியில் மலசல கூடங்கள் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதேவேளை சுன்னாகம் வாழைக்குலைச் சந்தைக்கென்று புதிய கட்டடம் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. (இ-13)

# மரண அறிவித்தல்

## அருட்திரு. இம்மானுவேல் விஜயரட்ணம் (O. M. I)

அருட் திரு. இம்மானுவேல் விஜயரட்ணம் அவர்கள் (5-7-99) நேற்று திங்கட்கிழமை மாலை கொழும்புத்துறை புனித சூசையப்பர் அ. ம. தி. குருமடத்தில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் புனித சூசையப்பர் ஆலயத்தில் இன்று (6 – 7 – 99) செவ்வாய்க்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (7 - 7 - 99) புதன்கிழமை மாலை 2.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட் திரு. ஜீவாபோல்
(O. M. I)

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(சி/8101

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் [illegible] 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06 07 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org